**கெகிராவ பிரதேச சபை**
**அனுராதபுரம் மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2020 ஏப்ரல் 22 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 ஜூலை 10 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்டம்பர் 04 ஆம் திகதியும், தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கெகிராவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் நீக்கப்பட்டிருந்த ரூ.1,214,381 பெறுமதியான நூல்நிலைய புத்தகங்களின் பெறுமதி கணக்கிடப் பட்டிருக்கவில்லை. | நீக்கப்பட்ட நூல்நிலைய புத்தகங்களின் பெறுமதி கணக்கிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ii) | பிரதேச சபை காரியாலய மதிலை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூ.1,957,776 மூலதனமாக காட்டப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் சரியாக கணக்கிடப்பட வேணண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (iii) | ரூபா 6,221,373 பெறுமதியான கம்பெக்டர் வாகனம் கணக்கிடப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்கள் சரியாக கணக்கிடப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வு ஆண்டின் ரூபா 3,575,357 பெறுமதியான நிலையான வைப்புகள் தேறுகையிலிருந்திருப்பினும், நிதி அறிக்கைகளில் நிலையான வைப்பு பெறுமதியிலிருந்து குறைத்துக் காட்டப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் சரியாக கணக்கிடப்பட வேணண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (v) | பிரதேச சபையில் அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் பணியாற்றிய 19 ஊழியர்களுக்கான ரூபா 1,043,972 பணிக்கொடை கொடுப்பனவு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளில் பணிக்கொடை ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (vi) | மீளாய்வு ஆண்டின் விதாதா மத்திய நிலையத்தை அபிவிருத்தி செய்தமைக்கான ரூபா 781,775 செலவினம் மூலதனமாக காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளை இனங்கண்டு மூலதனமாக்கப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன். |

**(ஆ) நிகழத்தக்க பொறுப்புக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 டிசம்பர் 31 இல் சபைக்கு எதிராக 07 வெளித்தரப்பினர்களும் சபையினால் 05 வெளித்தரப்பினர்களுக்கும் எதிராக வழக்கு போடப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக நிதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை | நிகழத்தக்க பொறுப்புக்களுக்காக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**(இ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) **கிடைக்க வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| • இரண்டு வருடங்களைத் தாண்டிய ரூபா 5,716,715 தொழிற்சாலை கடன்பட்டோர் பெறுமதி அறவிடப்பட்டிக்கவில்லை. | கிடைக்க வேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| • மூன்று வருடங்களைத் தாண்டிய ரூபா 1,000,902 பெறுமதியான குத்தகை நிலுவைத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை குத்தகைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன். |

(ii) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரண்டு வருடங்களைத் தாண்டிய ரூபா 884,102 பெறுமதியான தொழிற்சாலை கடன்கொடுத்தோர் செலுத்தப்பட்டிருக்கவில்லை | செலுத்த வேண்டிய மீதியை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன். |

**(இ) கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை**

**தகவல்கள் முன்வைக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 1,291,537,373 பெறுமதியான 03 கணக்கு விடயங்களிற்குரிய ஏற்றுக் கொள்ளத்தக்க சான்றுகள் முன்வைக்கப்படவில்லை. | நிதி அறிக்கைகளில் காண்பிக்கப்பட்டிருக் கும் மீதி பெறுமதியை உறுதிப்படுத்தத் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்ளுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 571 | இரண்டு வருடங்களைத் தாண்டிய ரூபா 101,870 பெறுமதியான முதலீடு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிதிப்பிரமாணத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ஆ) | 2006 நவம்பர் 14 ஆம் திகதிய PL/07/01/53 ஆம் இலக்க உள்நாட்டலுவல்கள் மறுசீரமைப்பு சுற்றுநிருபம் | | | |
| (i) | இலக்கம் 09 | மயானபூமி ஆவணங்களை பேணிவருவதற்கும், பகிரங்கப்படுத்துவதற்கும், மதில் வேலியமைத்து பாதுகாப்பளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | சட்டம், விதி, ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (iii) | இலக்கம் 06.2.2 (iii) | தொடர்ச்சியாக நடைபெறும் வீதிப் பராமரிப்பு முறைமையொன்று பின்பற்றப் பட்டிருக்கவில்லை | சட்டம், விதி, ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| | | சபைக்குச் சொந்தமான பாதைகள் வர்த்தமானியிடப் படாமலும், கொண்டு செல்ல முடியுமான உச்ச பாரம் காட்சிப்படுத்தப்படாமலும் இருந்தது. | சட்டம், விதி, ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

## 02. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 31,850,128 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,427,119ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 7,580,299 | 8,194,780 | 8,962,564 | 4,390,740 | 7,775,156 | 7,811,522 | 6,899,556 | 5,158,524 |
| (ii) | வாடகை | 8,293,360 | 6,341,619 | 6,251,216 | 392,510 | 7,712,662 | 5,937,287 | 2,570,687 | 302,107 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள | 4,988,300 | 4,784,173 | 4,784,173 | - | 4,501,101 | 4,392,295 | 4,392,295 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 26,975,780 | 38,185,782 | 1,152,740 | 86,531,567 | 30,739,000 | 21,823,589 | 43,069,301 | 49,498,525 |
| | மொத்தம் | 47,837,669 | 57,506,354 | 21,150,693 | 91,314,817 | 50,727,919 | 39,964,693 | 60,261,079 | 54,959,156 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2004 ஆண்டின் மதிப்பீட்டின் படி மீளாய்வாண்டுக்காக வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | புதிதாக மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதனடிப்படையில் வரிப்பணம் அறவிடப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் ரூபா 2,502,610 நிலுவை வரிப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவை வரியை அறவிடுவதற்கு சட்டத்தின் 158 வது பிரிவின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**2.2.3 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிட்ட ரூபா 497,460 கடை கூலி வருமானத்தில் ரூபா 194,243 மாத்திரமே வசூலிக்கப் பட்டிருந்ததுடன், ஒப்பந்தங்களில் நிபந்தனைகள் உள்ளடக்கப்படாமையால் மீதித் தொகையான ரூபா 303,217 அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு சட்டத்தின் 159 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ஆ) | நிலுவை வீதவரி ரூபா 263,542 அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவை வீதவரி அறவிடுவதற்கு சட்டத்தின் 159 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் டிசம்பர் 31 வரை கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப் பணங்கள் ரூபா 50,090,226 ஆகவும், முத்திரைக் கட்டணங்கள் ரூபா 4,373,600 ஆகவும் காணப்பட்டன. | கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டம் 126 பிரிவின் கீழ் 28 பிரதானமான விடயங்களை நிறைவேற்றுவதற்கான உப விதிகள் பிரயோகிக்கப்பட வேண்டியிருப்பினும், 2019 டிசம்பர் 31ஆம் திகதி வரையில் உரிய 18 விடயங்கள் தொடர்பாக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை | சட்டத்துக்கிணங்க உப விதிகள் பிரயோகிக்கப்பட வேண்டும். | 10 விடயங்களுக்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. |

**(ஆ) தின்மக்கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் நிர்வாகப் பகுதியில் சேரும் குப்பைகள் பிரதேசத்தின் ஹபரண செவனகம மற்றும் எம்புல்கஸ்வெவ ஆகிய இரண்டு இடங்களில் தரம் பிரிக்காது ஒழுங்கற்ற வகையில் போடப்பட்டிருந்தன | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்துக்கமைய கழிவு முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**(இ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| குப்பைகளை இரண்டு இடங்களில் ஒழுங்கற்றவிதத்தில் அகற்றியமையினால் பாரிய சுற்றாடல் பாதிப்பும், பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை பற்றவைப்பதன் | 2017 ஆண்டு டிசம்பர் 01ஆம் திகதிய இலக்கம் 2034.∴36 அதிவிசேட வர்த்தமானியின் | ஏற்றுக்கொள்கிறேன் |

| | | |
|---|---|---|
| மூலம் பாரியளவில வளி மாசடைதலும், மேலும் கழிவுகளை உணவாகக் கொள்ளும் வன விலங்குகளுக்கு சுகாதார தீங்கும் இருந்துவந்தது. | கட்டளை மற்றும் 1980 இலக்கம் 47 கொண்ட தேசிய சுற்றாடல் சட்டத்துக்கமைய சபை செய்யப்படல் வேண்டும். | |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 பிரகாரம் அடைய வேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள் குறித்து அறிந்திருக்கவில்லை. | 2030 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குரிய கடமைப் பொறுப்புக்கள் சபையினால் நிறைவேற்றப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஹபரணை நகரில் உள்ள 05 கடை 2018 ஜூலை 10 ஆம் திகதி உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. இந்த உபஷ் குத்தகை தடை செய்யப்பட்டுள்ளமை ஒரு நிபந்தனையாக ஒப்பந்தங்களில் உள்ளீர்க்கப்படாமையினால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது காணப்பட்டது. | ஒப்பந்தங்களில் உப குத்தகை வழங்குவது தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் உப குத்தகை வழங்கினால் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் குறிப்பிட்டு நிபந்தனைகளை விதிக்க வேண்டும். | குத்தகைக்காரரினால் சபைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |

**3.3 செயற்பாட்டு வினைததிறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுற்றுலாச் சபையில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களில் ஆண்டு | சட்டத்துக்கு அமைவாக நடவடிக்கை எடுக்க | ஏற்றுக் கொள்கிறேன். |

| | | |
|---|---|---|
| வருமானத்தில் இருந்து அறவீடு செய்ய வேண்டிய 1 சதவீதம் வரையான வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அந்நிறுவனங்களில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்டிக்கவில்லை | வேண்டும். | |

## 3.4 சர்சசைக்குரிய தன்மையிலான விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஜனவரி 01 இல் ரூபா 48,859,956 பெறுமதியான காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி சபையினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றின் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு அதன் பெறுமதி ரூபா 1,227,471,000 ஆக நிதி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்தமையினால் நிலையான சொத்துக்களின் பெறுமதி 2412 சதவீமாக அதிகரித்திருந்தது. | தகைமையுள்ள மதிப்பீட்டாளர்களை கொண்ட குழுவொன்றினால் மீள்மதிப்பீடு கணக்கிடப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் செய்யப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சீராக்கப்பட்டு பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்படும் ரூபா 2,165,000 பெறுமதியான டிராக்டர் 04உம், தண்ணீர் பௌசர் டேலர் 03 உம், மண்அழுத்தியொன்றும், மோட்டர் சைக்கிள் 02 உம் சபை வளாகத்தில் கைவிடப்பட்டிருந்தன. | சீராக்கப்பட்டு மீள பயன்படுத்தற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**3.5.2 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்படும் சபைக்குச் சொந்தமானது என புத்தகங்களில் பதியப்பட்டுள்ள அளவானது 31 ஏக்கர் 2 ரூட் 8 பர்ச்சஸ் காணிகள் 24 இன் உரிமையைக் கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான இடங்களை கையேற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான ரூபா 490,000 பெறுமதியுள்ள டிராக்டர் டேலர் இரண்டும் தண்ணீர் பௌசர் இரண்டும் பதிவு செய்யப்படாது சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தது. | சகல வாகனங்களும் பதிவு செய்யப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**3.5.3 விளைவற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2004 மற்றும் 2005 ஆண்டுகளில் ரூபா 2,500,000 செலவழித்து எம்புல்கஸ்வெவ பகுதியில் கட்டப்பட்டிருந்த கழிவு முகாமைத்துவ தொகுதி யும், உக்கலடையச் செய்யும் தாங்கிகள் 04 உம் பயன்படுத்தாமல் செயலற்றுக் காணப்பட்டன. | பயன்படுத்தப்படாத சொத்துக்களைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக் கொள்கிறேன். கொம்போஸ்ட் பசளை தயாரிப்பதற்குப் பயன்படுத்துவதற்காக சுத்தமாக்கப்பட்டு தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான ரூபா 7,605,000 பெறுமதியான கட்டடங்கள் 06 பயன்படுத்தப்படாது செயலற்றுக் காணப்பட்டன | பயன்படுத்தப்படாத சொத்துக்களைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | .ஏற்றுக்கொள்கிறேன். |